*2020 செப்டம்பர் 15*][திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விழிப்புணர்வு விளம்பரம் அச்சிடப்பெற்ற தாளினை காண்பித்தார்கள்.)

இப்படி ஒவ்வொரு நோய்க்கும், அதாவது நீரிழிவு இருந்தால் எப்படி? புற்றுநோய் இருந்தால் எப்படி? உயர் இரத்த அழுத்தம் இருந்தால் எப்படி? இதையெல்லாம் அச்சிட்டு மருத்துவ நிபுணர்கள் மூலமாக அறியப்பட்டு, இந்த நோய் யாருக்காவது இருந்தால் இப்படி symptoms வரும், இப்படி symptoms வந்தால் உடனடியாக மருத்துவர்களை அணுக வேண்டுமென்று இவ்வளவு விழிப்புணர்வையும் நாங்கள் ஏற்படுத்தியிருக்கிறோம்.

ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் ஓர் உயிரைக்கூட இழக்கக் கூடாது என்பதற்காக முழுமையான விழிப்புணர்வுப் பிரச்சாரம் நடத்தியுள்ளோம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–55

## 5. அறிவிப்பு

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)–ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் 9–வது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக, Panel of Chairmen ஆக நியமிக்கின்றேன்:

1. திரு. பி.எம். நரசிம்மன்
2. திரு. எஸ்.பி. சண்முகநாதன்
3. திரு. சு. ரவி
4. திரு. இரா. குமரகுரு
5. திரு. சு. குணசேகரன்
6. திரு. வி.வி. இராஜன் செல்லப்பா